# பொதுக்காலம் பதின்நான்காம் ஞாயிறு

திருவழிப்பாட்டு ஆண்டு A (06-07-2014)

### திருப்பலி முன்னுரை

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இரக்கமும் கனிவும் உடையவரான நம் இறைத் தந்தையின் திருநாமத்தில் நல்வாழ்த்துக்கள் கூறி உங்கள் அனைவரையும்; பொதுக்காலம் பதின்நான்காம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு வரவேற்று நிற்கின்றோம்.

நமக்கு இளைப்பாறுதல் தருகின்றவரும், கனிவும் மனத்தாழ்மையும் உடையவருமான நம் ஆண்டவரின் சந்நிதானத்தில் ஒன்று கூடியுள்ளோம். நீதியுள்ளவரும், எளிமையானவரும், வெற்றிவேந்தருமான நம் இறைவன் பகைமையையும், போரையும், வன்முறையையும் ஒழித்து அமைதியை நமக்கு அருள்வார் என்னும் ஆசீர்வாத வாக்குகளும், பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என்னும் அழைப்பும் நமக்கு புதிய மகிழ்வையும், நம்பிக்கையையும் தருகின்றன. ஆகவே நாம் அனைவரும் இறைவனின் நுகமாகிய இறைக் கட்டளைகளை ஏற்றுக்கொண்டு இறைவனிடம் கற்றுக்கொள்வோம். விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவராம் இறைவனைப் போற்றுவோம். அமைதியின் வாழ்த்தை இதயத்தில் சுமந்து சென்று உறவுகளை உறுதிப்படுத்துவோம். திருப்பலியில் வரம் கேட்டுச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**கனிவும் மனத்தாழ்மையும் உடையவருமான ஆண்டவரே இறைவா,**

எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: தூய ஆவியின் நிறை வல்லமையால் அவர்களை நிரப்பி, அவர்கள் ஒவ்வொருவரும் கனிவும் மனத்தாழ்மையும், எளிமையும் உள்ளவர்களாக வாழுவதற்கு வேண்டிய சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மாசற்றோரை அன்பு செய்யும் இயேசுவே,**

இன்றைய நாளில் என் குடும்பத்திலுள்ள, நான் அறிந்த அனைத்துக் குழந்தைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். அவர்களின் இனிமையில், மாசின்மையில் உமது உடனிருப்பை உணர்கின்றேன். உம்மைப் போற்றுகிறேன். இறைவா, உலகெங்கும் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் ஆசிர்வதித்து, அவர்களின் உணவு, உடை, உறைவிடம் மற்றும் அன்பு என்னும் தேவைகளை நிறைவேற்றுவீராக. நானும் குழந்தையைப் போல மாறி, விண்ணரசில் இடம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உமது வார்த்தையால் எம்மைக் குணப்படுத்தும் தந்தையே இறைவா!**

பல்வேறு நோய்களினாலும், கவலைகளினாலும் பாதிக்கப்பட்டு வேதனையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்கள் உடல் நலமும், மனநலமும் பெற்று மகிழ்ந்திட அருள்கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என்ற உன்னத ஆறுதலை எமக்களித்த தந்தையே!**

இன்று பல்வேறு துன்பச் சுமைகளைத் தாங்கியவர்களாக வேதனையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவர்மீதும் மனமிரங்கி, அவர்கள் கண்ணீரைத் துடைத்து ஆறுதலை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆண்டவராகிய இயேசுவே,**

எமது இளைஞர்கள் அனைவரும் தூய ஆவியின் துணையால், உடலின் தீச்செயல்களைச் சாகடித்து, ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என்னும் அழைப்பிற்கு ஆழமாக பதில் கொடுத்து தூய வாழ்வு வாழ அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**

*நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

**நலிந்தோரைக் கண்ணோக்குகின்ற தந்தையே!**

*உலகில் பல்வேறு சவால்களுக்குள்ளும், துன்பங்களுக்குள்ளும் அகப்பட்டு கண்ணீரோடும், கவலையோடும் வாடிக்கொண்டிருக்கும் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்கள் அமைதியோடும், மகிழ்வோடும் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*